**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 500** **நாள்: 22.09.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தினை விரிவாக்கம் செய்து தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள், நுங்கம்பாக்கம் சென்னை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தினை விரிவாக்கம் செய்து தொடங்கி வைக்கும் நிகழ்வாக, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், திருவான்மியூர், காந்தி கிராமத்தில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி திட்டத்தை இன்று (22.09.2026) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள், நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவர்களுடன் உணவருந்தினார்.

இந்நிகழ்வுகளின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**